# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
எண். 46, தோழர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
☎ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு.பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.இராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தீ.கலைச்செல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி


ஊடக செய்தி 7 / 2019 நாள் : 29.05.2019

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும்.

**ஊடகச் செய்தி**

## போராடும் சாலைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுக

## தமிழக முழுவதும் 30.05.2019 அன்று

## வட்ட / மாவட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டம்

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அறிவிப்பு

தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறையில் சாலை பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் சுமார் 10,000 சாலைப் பணியாளர்களின் கோரிக்கைகளான

41 மாத பணி நீக்கக் காலத்தை பணிககாலமாக அறிவித்து பணப்பலன்கள் வழங்கிட வேண்டும்.

சாலைப்பணியாளர்களுக்கு தொழில்நுட்ப கல்வித்திறன் பெறா ஊழியருக்கான (Unskilled Employees) ஊதிய நிர்ணயம் ரூ.5,200/- ரூ.20,200 தர ஊதியம் ரூ1,900/- உடனே வழங்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, நேராஜந் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

சாலைப் பணியாளர்களுக்கு வேலை நிதியில் ஊதியம் வழங்குவதை கைவிட்டு, பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்க வேண்டும்.

சாலைப் பணியாளர்கள் பணி நீக்க காலம் மற்றும் பணி காலத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு 18 ஆண்டுகளாக பணி வழங்காமல் இருக்கும் அவலத்தை போக்கிட உடனே பணி வழங்கிட வேண்டும்.

சாலை பராமரிப்பு பணியை தனியார்மயமாவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட நீண்டகால நிலுவை கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் சார்பில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அலுவலகம் முன்பு 28.5.2019 முதல் குடும்பத்தினருடன் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சாலைப் பணியாளர்களை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சாலைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும், அவர்கள் மீது அடக்குமுறைகளையும், அச்சுறுத்தல்களையும் கைவிடவேண்டும், கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்கவும், சங்க நிர்வாகிகளை அழைத்துப்பேசி நியாயமான வாழ்வாதார கோரிக்கைகளுக்கு சுமூக தீர்வு காண தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

**மேலும் போராடும் சாலைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி 30-05-2019 அன்று தமிழகம் முழுவதும் வட்ட,மாவட்ட தலைநகர்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.**

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்